BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# புதியதொரு தீயணைப்பு நினைவக வளாகம் அமைப்பதற்காக ப்ராம்ப்ட்டன் தொழில்முறை தீயணைப்பு வீரர்கள் $150,000 நிதி வழங்குகிறார்கள்

***மறைந்த தீயணைப்பு  வீரர்களை கவுரவிக்கும் விதமாக கலைஞர்கள் தங்கள் கைவண்ணம் காட்டுவதற்காக விண்ணப்பிக்க அழைக்கப்படுகிறார்கள்***

ப்ராம்ப்ட்டன், ON (செப்டம்பர் 2, 2021) – இன்று, ப்ராம்ப்ட்டன் தொழில்முறை தீயணைப்பு வீரர்களாகிய, ஐஏஎஃப்எஃப் லோக்கல் 1068 (IAFF Local 1068) அமைப்பானது, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்திடம் 150,000 டாலர் காசோலையை வழங்கினார்கள்;  இது ப்ராம்ப்ட்டன் நகரில் பணியின்போது, தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்து  மறைந்துபோன தீயணைப்பு வீரர்களைக் கவுரவிக்கும் விதமாக புதிய ஒரு நினைவுச்சின்னம் அமைப்பதற்கு பங்களிக்கிறது. இந்த நிதியை பங்களிப்பதற்கென நகரசபை உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர், இது ஏற்கனவே நகரத்தால் வழங்கப்பட்ட $ 150,000 உடன் சேர்த்து, ஆகமொத்தமாக  இந்தக் கலைச்சின்னத்திற்காக $ 300,000 நிதி சேர்ந்துள்ளது.

இந்த நினைவுச்சின்னமானது வில்லியம்ஸ் பார்க்வேயில் உள்ள புதிய தீயணைப்பு அலுவலக தலைமையகம் மற்றும் பயிற்சி மையத்தில் 2023 ஆம் ஆண்டின் வசந்த காலத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதிநவீனமான, மையப்படுத்தப்பட்ட இந்தக் கட்டிடத்தில், ப்ராம்ப்ட்டனின் தீயணைப்பு மற்றும் அவசர சேவைகளுக்கான தலைமையகம், முன்கூட்டிதடுக்கும் பிரிவு , புதிய தீயணைப்பு நிலையம் 203, அவசர செயல்பாட்டுக்கான ஒரு மையம், அவசர நடவடிக்கைகளுக்கான அலுவலகம் மற்றும் உட்புற மற்றும் வெளிப்புற தீயணைப்பு பயிற்சி வசதிகள் ஆகிய அனைத்தும் இருக்கும்.

**கலைஞர்களுக்கான அழைப்பு**

புதிய ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைக்கான ஒரு நினைவகத்தை உருவாக்க ஆர்வமுள்ள கலைஞர்களை மற்றும் கலைஞர் தலைமையிலான குழுக்களை, விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம்  அழைக்கிறது. கலைஞர்கள் கனடா நாட்டில் குடியிருப்பவராகவும் மற்றும் கனடாவில் வேலை செய்ய சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

ஆர்வம் கொண்டிருப்பதாக தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தும் கலைஞர்களுக்கான இந்த

அழைப்பானது, இரண்டு-நிலை போட்டி செயல்முறையின் முதல் கட்டமாகும்.

- முதல் கட்டம்: திட்டத்தில் செயலாற்றும் பங்கு கொண்டவர்கள் கொண்ட தேர்வு குழுவினால், ஆர்வம் கொண்டிருப்பதாக தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தும் கலைஞர்கள் பற்றிய மதிப்பாய்வு செய்தல்.
- கட்டம் இரண்டு: ஒரு வடிவமைப்பு முன்மொழிவை சமர்ப்பிக்க தகுதியான கலைஞர்கள் மட்டுமே அடங்கிய ஒரு சிறு பட்டியலுக்கான அழைப்புகள். இந்த கட்டத்தில் வெற்றிகரமான கலைஞர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

முதல் கட்டத்திற்கான சமர்ப்பிப்புக்கள் செப்டம்பர் 2 முதல் அக்டோபர் 14, 2021, மதியம் 2 மணி வரை ஏற்கப்படும். மேலும் தகவலுக்கு மற்றும் கலைஞர்களுக்கான அழைப்பு ஆவணத்தைப் பதிவிறக்க, brampton.ca/publicart ஐப் பார்வையிடவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

”IAFF லோக்கல் 1068 இல் இருக்கும் எங்கள் பங்காளிகளிடமிருந்து இந்த நம்பமுடியாத தாராளமான பங்களிப்புக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இந்த நினைவுச்சின்னமானது, இன்னுயிர்த் தியாகம் செய்த அனைவரையும் கவுரவிக்கும் விதமாக இருக்கும்; மேலும் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வினை சாத்தியமாக்குகின்ற நமது தீயணைப்பு குழுவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை தினமும் நினைவூட்டும். நமது ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைக்காக இந்த முக்கியமான நினைவகத்தை உருவாக்குவதில் பங்கேற்க கலைஞர்களை அழைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன் - எங்கள் நகரத்தில் ஒரு விலைமதிப்பற்ற பங்கினை வகிக்கும் ஒரு குழுவை அங்கீகரிப்பதானது, வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே வாய்க்கக் கூடிய சந்தர்ப்பமாகும்.

– *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

”ப்ராம்ப்ட்டன் நகரை ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான சமூகமாக மாற்றுவதில் ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள் அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த கலைநயமிக்க நினைவகத்திற்கான ஒருங்கிணைப்பு, இந்த புதிய வளாகத்தை அர்த்தமுள்ளதாக மேம்படுத்தும் மற்றும், ஒவ்வொரு நாளும் எங்கள் சமூகத்திற்காக இதுபோன்ற முக்கியமான மற்றும் தன்னலமற்ற பணிகளைச் செய்யும் எங்கள் குழு உறுப்பினர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு பங்களிப்பு செய்யும்.

– ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் *1 & 5;* தலைமைப் பொறுப்பு, சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்

"இந்த நினைவிடத்தை உருவாக்கம் செய்வதற்கு கூட்டாண்மை மற்றும் ஒத்துழைப்பு நடைபெறுவதைக் காண்பது நெகிழவைக்கிறது, இது எங்கள் குழு மற்றும் எங்கள் சமூகத்திற்கு மிகவும் அர்த்தம் வாய்ந்தது. ப்ராம்ப்டன் நகரத்தின் சார்பாக, IAFF லோக்கல் 1068 அமைப்பில் உள்ள எங்கள் பங்காளிகளுக்கு இந்த நினைவகம் அமைப்பதற்கான அர்ப்பணிப்புக்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நினைவிடத்தை உருவாக்குவதில் பங்கேற்க, உள்ளூர் கலைஞர்கள் விண்ணப்பிக்க வருவதை நான் ஊக்குவிக்கிறேன், இது எங்கள் ஊழியர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் மற்றும் தீயணைப்பு சமூகத்திற்கு உண்மையிலேயே அர்த்தம் தரும் விஷயமாகும்.”

– *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"எங்கள் குழு உறுப்பினர்கள் பணி நிமித்தமான சகாக்கள் மட்டுமல்ல, குடும்பத்தினரும் ஆவர். இந்த நினைவுச்சின்னமானது, ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைக் குழுவினருக்கு நிறைய அர்த்தம் தரும் விஷயமாகும், இது, பணியின்போது வீழ்ந்த நமது உறுப்பினர்களின் வாழ்க்கையையும் பங்களிப்பையும் கொண்டாடும் வாய்ப்பை அளிக்கிறது. இந்த நினைவுச்சின்னம் எங்கள் புதிய வில்லியம்ஸ் பார்க்வே தீயணைப்பு வளாகத்தை உண்மையிலேயே ஒரு சிறப்பு வாய்ந்த இடமாக மாற்றும்.

– *பில் போயெஸ், தலைவர், ப்ராம்ப்ட்டன் தீயணைப்பு மற்றும் அவசரகால சேவைகள்*

"இந்த மிக முக்கியமான முயற்சிக்கு ஆதரவாக வாக்களித்த எங்கள் உறுப்பினர்களை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். இந்த நினைவுச்சின்னம், அனைவருக்கும் நிறைய விஷயங்களைக் கூறும், மற்றும் எங்கள் சமூகத்தின் பாதுகாப்பிற்காக தியாகம் செய்தவர்களை அங்கீகரிப்பது எவ்வளவு முக்கியமோ, அதே போல எங்களின் மற்றும் அவர்களின் குடும்பமும் அவர்களை நினைவில் வைப்பதும் முக்கியமாகும்.

– பால் லெகோம்ப்ட்டெ, தலைவர், ப்ராம்ப்ட்டன் தொழில்முறை தீயணைப்பு வீரர்கள் அமைப்பு, *IAFF Local 1068*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Prabhjot.Kainth@brampton.ca